ந.க.உ2/6760/2019
நாள்: 04.04.2019

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.

P-R.NO: 08
05/4/19

## நாளிதழ் செய்தி

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால், **Assistant Agriculture officer** பதவிக்கான போட்டி தேர்வு 07.04.2019 முற்பகல் (10.00 முதல் 01.00 வரை) பிற்பகல் (02.30 முதல் 04.30 வரை) நடைபெறவுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் National College (Autonomous), Dindigul Road Karumandabam, Trichy-ல் 712 நபர்கள் இத்தேர்வினை எழுதவுள்ளனர்.

இத்தேர்விற்கு இரண்டு முதன்மைக் கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இப்போட்டித் தேர்வு வினாத்தாள் மற்றும் விடைத்தாள்களை தேர்வு மையங்களுக்கு கொண்டு செல்லும் பணியினை மேற்கொள்ள 1 இயங்குக்குழுக்கள் (Mobile Unit) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு துணை வட்டாட்சியர் நிலையில் ஒரு அலுவலர், ஆயுதம் ஏந்திய ஒரு காவலர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளரும் இயங்குவர். மேலும் 2 தேர்வு மையத்திற்கு 2 தேர்வு கூட ஆய்வு அலுவலர்களும், 2 வீடியோகிராபர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தேர்வு மையத்தில் காவல்துறை மூலம் பாதுகாப்பு பணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வாளர்கள் தேர்வு மையங்களுக்கு செல்ல சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளது. தேர்வு எழுத வரும் தேர்வாளர்கள் செல்லிடை பேசி உள்ளிட்ட எவ்வித மின்னனு சாதனங்களும் தேர்வு மையங்களுக்கு எடுத்து வர அனுமதி இல்லை என தேர்வாணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒம்). சு. சிவராசு,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

/ உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருச்சிராப்பள்ளி. 02/4/19.

02/04/19

பெறுநர்:

மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.